ஓம்

சிந்துபூந்துறை ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி

ஆச்ரமம்

# ஸ்ரீ வேதநாயகசாமி பதிகம்

இஃது

மேற்படி சுவாமிகள் சிஷ்யரும், பென்சன்
போலீஸ் இன்ஸ்பெக்டருமான,
B. B. நாராயணசுவாமி நாயுடு அவர்களால்
இயற்றி வெளியிடப்பெற்றது.

யூனியன் சென்ட்ரல் பிரஸ்,
திருநெல்வேலி.
1924

ஸ்ரீ

சிந்துபூந்துறை தக்ஷிணாமூர்த்தி

ஆச்ரமம்

# ஸ்ரீ வேதநாயகசாமி பதிகம்

## விநாயகர் வணக்கம்

### வெண்பா.

சால்வேத நாயக சாமி மலரடிக்கு
நால்வேத சாரத்தி னன்பதிக—நூல்வேய்தல்
பத்தி விநயகனின் பாப்பாவு வார்க்கிதஞ்செய்
சித்தி விநயகனின் சித்து.

## நூல்

பார்பூத்த செல்வமலி குருவிகுள நகரியிற்
பண்புபெற வவதரித்துப்
பயில்கலையி னுண்ணறிவு றுத்திடுமு வாத்திமைப்
பயிற்சியை நடத்துமேல் வைச்

சீர்பூத்த மீச்செல்வம் வேண்டியிப் பார்மருட்
        செல்வமத னைப்பி றழ்ந்து
தெங்குலவு மயநகரி மேவுமக் கேற்பெயர்
        சித்தன்வாய் ஞான மெய்தி
ஏர்பூத்த வாண்டாயி ரத்துத்தொ ணூற்றேழில்
        † யாளிமதி பூர்வ பக்கம்
எண் ‡ பறவை நாளிலிமை யோர்களெதிர் கொள்ளவே
        யின்பநிலை நீபு குந்தாய்
வேர்பூத்த பலவுநிறை சிந்துபூந் துறைநகரின்
        மேன்மையுறு தென்மு கப்பேர்
மேவுமாச் சிரமம்வளர் தேவுமற் றறியாத
        வேதநா யகசா மியே. (1)

ஆலமர்தென் முகனனைய திருவுருவ மன்பருக்
        கருள்பொழியு மணிகொண் முகமும்
அருவினைகள் சொய்யுவெண் ணீறுடனை திருநுதலு
        மங்கமல மனைய விழியும்
பாவினிகர் வேதமொழி பகர்திருப் பவளமும்
        பணிவடம் பூண்ட மார்பும்

---

† இயாளிமதி-ஆவணிமாதம். ‡ பறவைநாள்-அவிட்டம்.

பாரித்த திண்டோளு மென்மலர்ச் செங்கையும்
பையவிய னடையின் வீறும்
மேலி லணி தாதுடையம் யோகதிரி தண்டமும்
மேலோர்க ளென்று மேத்து
மேன்மைபெறு பதமலரு மனுதினமு மறவாத
மெய்யறிவு ணர்த்தி யாள்வாய்
வேலமர்கை வேந்தர்மலி சிந்துபூந் துறைநகரின்
மேன்மையுறு தென்மு கப்பேர்
மேவுமாச் சிரமம்வளர் தேவுமற் றறியாத
வேதநா யகசா மியே. (2)

மருவும்மூ மலர்களிற் றுரிண்டை வாசிகை இ
மாலைபுனை சரியை யோரும்
வளமைபெற வலகிடுதன் மெழுகிடுதல் கோலமிடன்
மரபுளிசெய் கிரியை யோரும்
உருவிலெழ வாசியினை யுய்த்துநுதன் மத்தியிடை
யொளிநாடி யோகி யோரு
மூலகெலா மித்தையென வுண்மைநிலை தனைநாடு
முணர்வுடைய மேலை யோருங்
கருதரிய தண்டமிழ்ப் புலமைபெறு வீரகுடைய
கவிவாணர் கணமு முன்றன்

கான்மலர்ப் பராயுய்ந்த வாகண்டு சார்ந்தனன்
கருணைகூர்ந் தெனையா ளுவாய்
விருதுபுனை வீறுபெறு சிந்துபூந் துறைநகரின்
மேன்மையுறு தென்மு கப்பேர்
மேவுமாச் சிரமம்வளர் தேவுமற் றறியாத
வேதநா யகசா மியே. (3)

ஆனன மலர்த்தியுல கோர்க்கினிது கூறிமெய்
யன்புபுரி கின்ற மாண்பு
மவனிதனி லென்னருஞ் சோதர ரெனுந்தன்மை
யாற்றியுயர் நிகரில் சீரும்
ஊனுடலெ வுயிரினுஞ் சீவகா ருண்ணிய
மொழுக்கிடுஞ் சீல குணமும்
முரவோர்க டாபித்த பிரமசிற் சங்கத்தி
லோங்கியொளிர் கின்ற வுணர்வுங்
கானமமர் நான்மறையு லோகோப காரமாக்
கழறிடுசந் மார்க்கம் யாவுங்
கனவினிடை யேனுநினை யாதுவீண் போதுகழி
கடையனே னடைய வருள்வாய்
மீனினமு லாவுநீர் சிந்துபூந் துறைநகரின்
மேன்மையுறு தென்மு கப்பேர்

மேவுமாச் சிரமம்வளர் தேவுமற் றறியாத
வேதநா யகசா மியே. (4)

காதல்புரி தன்மனைவி வயிறெரிய வயன்மனைவி
கலவிபுரி கின்ற கர்மம்
கள்ளுண்டல் மடியழுக் காறுகயம் வெகுளிகொலை
களவுபொய் சூது நிந்தை
ஏதமுறு கூடாவொ ழுக்கம்பு றங்கூற
விரவுபுல் லினமே வுதல்
இன்னாத நட்புநா ணின்மையுட் பகைமத
மிடம்பமோ கம்மு லோபம்
நீதமுறு பெரியார்ப்பி ழைத்தல்புல் லறிவாண்மை
நீதியொவ் வாமை யாதி
நீர்மையிலா வாமார்க்க மெனதுணர்வின் வாராத
நேர்மைதந் தருள்செய் குவாய்
வேதவொலி மல்கியொளிர் சிந்துபூந் துறைநகரின்
மேன்மையுறு தென்மு கப்பேர்
மேவுமாச் சிரமம்வளர் தேவுமற் றறியாத
வேதநா யகசா மியே. (5)

அளறு படு காமாதி திமிதிமிங் கிலகில
மலைப்பநிமி ராங்காரமா

182000

மலைமோது மஞ்ஞான வாரிதிக டப்புதற
காமரக் கலமாயி னேன்
கிளரறிவெ னும்புனலை யாருயிர்ப் பாத்தியிற்
கெழுமுறப் பாய்ச்சி யமல
கேவலப் பலனெடுக் கின்றசமு சாரிகட்
கேயொளிர் கிரீடமா னேன்
வளமைமலி யொண்புகழ்ப் பேரொளி பரப்பியே
வாரிதி யுடுத்த ஞால
வைப்பினெண் டிசையினுக் கோர்தனித் தூண்டாத
மாமணித் தீபமா னேன்
விளர்வளை கள் குழுறுநீர்ச் சிந்துபூந் துறைநகரின்
மேன்மையுறு தென்முக கப்பேர்
மேவுமாச் சிரமம்வளர் தேவுமற் றறியாத
வேதநா யகசா மியே. (6)

முயற்களா துடைத்தமதி முகமுமுகிழ் முறுவலு
முருக்கிதழு முளரி வாயும்
முருந்தெயி றும் வின்னுதலும் யாழ்மொழியு மெள்ளின்மலர்
மூக்குமா னேக்கு விழியும்
புயற்கருங் குழலுமிள நீரனைய கொங்கையும்
பொய்யெனு ணிடையு மூற்ற

பூவையரா னிகயா கன்னல்வரி வில்லெனப்
    பொறிவண்டு நாணியாக
வயக்கமுறு மலர்வாளி யாக்கடன் முரசா
    மதன்வந் துடற்ற நிற்ப
மாழாந்து சோகாந்தெ னறிவுபறி போயினேன்
    வல்லேயருள் செய்தல் வேண்டும்
வியக்கமணி மாடமலி சிந்துபூந் துறைநகரின்
    மேன்மையுறு தென்முகப்பேர்
மேவுமாச் சிரமம்வளர் தேவுமற் றறியாத
    வேதநாயக சாமியே. (7)

ஆசையினி யன்றதொரு மனதினே டன்புமிகு
    மன்னையப் பன்மக்கள் கேள்
ஆர்வமனை பூமனை யென்றும யங்கியே
    யாவிமருள் கின்றபோழ்து
பாசமிகு மங்கையரு மாலவரு மருகரிற்
    பரிவினு டனுழுத ரற்றப்
பரிதாப மாகியென் செய்வதென வெல்லாம்
    பரனசெயல லாலில்லெனப்
பேசியக் கைநெரித் தொருவருக் கொருவர்நாம்
    பிரியநாள் வந்தடுதனுமுன்

பெட்பி னுட னின்பெய ரெடுத்தறையு மெய்யறிவு
பெறவெனக் கருளல்வேண்டும்
வீசுபுகழ் வாழ்வுசேர் சிந்துபூந் துறைநகரின்
மேன்மையுறு தென்மு கப்பேர்
மேவுமாச் சிரமம்வளர் தேவுமற் றறியாத
வேதநா யகசா மியே. (8)

வா னுளு மிந்திரன தாக்கமுற் றூர்வசிசெ
வாயமிர் தருந்து மின்ப
வாழ்க்கையுமி மன்னுலகி லும்பன்மே லம்பாரி
வைத்துலவு மரசின் வீறும்
நா னுளு நயவாது பணிலமுத் துஞ்சினையெ
னதெனதென வேயொ றுத்து
நணிவழக் கிடவலம் புரியூட றுத்துவிடும்
நளினமலர் வாவி சுற்றித்
தேனுறு பாய்மலர்ச் சோலைசூழ் நின்றளித்
திணிபடிக் கல்வி ருக்கந்
திரள்குருகு தம்பமாச் சென்மித்து நின்சேவை
செய்துமகிழ் கொள்வல் கண்டாய்
மீ னுணு மணிமதிற் சிந்துபூந் துறைநகரின்
மேன்மையுறு தென்மு கப்பேர்

மேவுமாச சிரமம்வளர் தேவுமற் றறியாத
வேதநா யகசா மியே. (9)

மமதையெனு மூலக்கி ளங்கசழ்ந் தெறியுணர்வும்
வாய்மவுன யோக நிலையின்
மன்னிமுனை மூக்கினின் மனமூன்ற வைத்துருகு
மதியமுத ருந்து மறிவும்
சமயவகை சாதிவகை யால்வரு குறும்பறச்
சாந்தமே லோங்கு தெளிவும்
தத்துவவி சாரணைசெய் தருமறையின் முடிவான
தத்வமசி யோரு மதியும்
அமலமுறு நின்னடியர் பொன்னடிக ளென்முடியி
லணியெனப் புனை போதமும்
அகலாது தமியனேன் மனதிலண வரதநடை
யாடவருள் புரிதலென்றே
விமலமெய் யறிஞர்பொலி சிந்துபூந் துறைநகரின்
மேன்மையுறு தென்மு கப்பேர்
மேவுமாச் சிரமம்வளர் தேவுமற் றறியாத
வேதநா யகசா மியே. (10)

மேருடு நிமிர்புகழ்த் தக்ஷிணை மூர்த்தியவன்
மேன்மைபெறு மாச்சிரம மெய்

மேவுமய நகரிமிக் கேல்யோகி கேமன்முனி
வேதநா யகசாமி மால்
ஊனுறு வேலேந்து ஜார்ஜ்சக்ர வர்த்தியவ
னுயிரனைய மேரியரசி
யோதரிய நான்மறையின் முடிவான நுண்பொரு
ளுலாம்பிரம ஞான சங்கம்
தேனுவி னூறுபர மானந்த சாதுதென்
சிந்துபூந் துறைநெல் வேலி
செகதலத் தறவோர்கண் முனிவரர்கள் யோகியர்கள்
சீலகுண வித்வ ஜனர்கள்
ஆனுத விப்பதிக மறைபவர்கள் கேட்பவர்கள்
யணிபெற வியற்று நாரா
யணசாமி பக்தபத ஜலசாத நாவலவ
னனுதினமும் வாழி பெரிதே. (1

ஸ்ரீவேதநாயகசாமி பதிகம் முற்றிற்று.

182000

யூனியன் செனற்ரல் பிரஸ், திருநெல்வேலி —1924